BETHSHAN
SPECIAL SCHOOL



# நிகழ்வுகள்

2024
ஆண்டு அறிக்கை

## சுதந்திர தினவிழா





நமது பள்ளியும், மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கமும் இணைந்து பள்ளி வளாகத்தில் நாட்டின் 78 - வது சுதந்திர தினவிழாவினை சிறப்பாக கொண்டாடினோம். இவ்விழாவிற்கு மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கத்தின் தலைவர் **Rtn. PHF. S. தாஸ் குமார்** அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார்கள். உடன் அச் சங்கத்தின் நிர்வாகிகள் உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக நத்தம், குறிஞ்சி அக்ரோ புராடக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் **Rtn. PHF. A. முருகானந்தம்** அவர்கள் நாட்டின் தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை வழங்கினார்கள். நிகழ்ச்சியின் முடிவில் மாணவர்களுக்கும், கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்கள்.

## மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்





நமது பள்ளி மாணவர்கள் மாவட்ட மற்றும் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு அநேக வெற்றிகளை பெற்றுள்ளார்கள். தேசிய அளவில் நடைபெற உள்ள சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.



## பெற்றோர் ஆலோசனைக் கூட்டம்

ஒவ்வொரு கல்வியாண்டிலும் மூன்று முறை பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கு குழந்தைகளின் முன்னேற்றம் மற்றும் கையாளும் விதம் பற்றி பல்வேறு தலைப்புகளில் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் கூட்டம் நடத்தப்படும். இதில் இரண்டாம் காலாண்டில் நடைபெற்ற பெற்றோர் ஆலோசனைக் கூட்டத்தில் பங்குகொண்ட பெற்றோர்கள்.

## உலக மனநல நாள்




21 ஆம் ஆண்டு உலக மனநல நாள் நிகழ்ச்சியை நமது பள்ளியும், ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டல், மதுரை ரவுன்டு டேபிள் - 14 மற்றும் மதுரை லேடிஸ் சர்கிள் 8 ஆகிய சங்கங்கள் இணைந்து மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்தியது. இப்போட்டிகளில் மதுரை மாவட்டத்திலுள்ள 22 சிறப்பு பள்ளிகளை சார்ந்த 132 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். **"HAPPINESS THROUGH SERVICE"** என்கிற இவ்வருட கருப்பொருளை மதுரை ராஜன் மெட்ரிக்குலேசன் பள்ளியின் இயக்குநர் **Rtn. R. ரவி பார்த்தசாரதி** அவர்கள், வெளியிட அதன் முதல் பிரதியை ஜே.ஸி. ரெஸிடென்ஸி ஹோட்டலின் செயல் இயக்குநர் **திரு.ரிஷ்வந்த் ஜெயபால்** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். போட்டிகளை மதுரை ரவுன்டு டேபிள் - 14 சங்கத்தின் சேர்மன் **திரு. D. மணிராம்குமார்** அவர்களும், மதுரை லேடிஸ் சர்க்கிள் 8 சங்கத் தலைவி **திருமதி. S. சுரேக்கா பிராபாகரன்** அவர்களும் துவக்கி வைத்தார்கள். போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழை தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் மதுரை மண்டல இயக்குனர் **P. ஜெபாநாத் ஜூலியஸ்** அவர்களும், மதுரை, பவித்ரா எண்டர்பிரைசஸ் உரிமையாளர் **Rtn. P. செல்லப்பாண்டி** அவர்களும் இணைந்து வழங்கி கௌரவித்தார்கள். இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு மதுரை ஜே.ஸி.ரெஸிடென்சி, மதுரை ரவுன்டு டேபிள் - 14 சங்கம் மற்றும் மதுரை லேடிஸ் சர்க்கிள் - 8 சங்கம் ஆகியவை பெரிதும் உறுதுணையாக இருந்தது.









## பிறந்தநாள் விழா

நமது பள்ளி மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறையும் அன்பும் கொண்டவர் மதுரை கல்யாணி அசோசியேட்ஸ் ( பி ) லிட்., இயக்குநர் மதிப்பிற்குரிய **திரு. L. முரளி கிருஷ்ணன்** அவர்கள் தன்னுடைய பிறந்த நாளை நமது பள்ளி மாணவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடினார். உடன் பள்ளியின் தலைவர் திரு.ஜெயசீலன் மற்றும் போதகர். ஸ்டீபன்சன் ஆகியோர் உள்ளனர்.



## மருத்துவ முகாம்



இந்தக் கல்வியாண்டில் நமது பள்ளி மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை முதன்மையாக கொண்டு பல மற்றும் பொது மருத்துவ முகாமினை Young Indians அமைப்பின் மூலம் நடத்தினோம். அதில் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டது.

## குழந்தைகள் தினவிழா

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நமது பள்ளி மாணவர்களுக்கு வர்ணம் தீட்டும் போட்டியினை மதுரை HDFC Mutual Funds நிர்வாகத்தினர் நடத்தினார்கள். இதில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசும், பாராட்டுச் சான்றிதழும் HDFC Mutual Funds - ன் தென் மாவட்ட மேலாளர் **Rtn.Dr.P. சுரேஷ் பாண்டியன்** அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள் உடன் HDFC Mutual Funds பணியாளர்கள் உள்ளனர்.





மா மதுரை திருவிழாவில்
நமது பள்ளி மாணவர்கள்

## கல்வி மற்றும் இன்பச் சுற்றுலா


வெல்லம் தயாரிக்கும் ஆலையை
பார்வையிடும் நமது குழந்தைகள்


மாம்பழ ஜூஸ் தயாரிக்கும் ஆலை
குறிஞ்சி அக்ரோ புராடக்ட்ஸ், நத்தம்


சாத்தையார் அணை, பாலமேடு

## கிறிஸ்துமஸ்விழா




கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சிகளை மதுரை நேரு வித்தியாலயா பள்ளியில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி மாணவிகள் நமது பள்ளி மாணவர்களோடு சேர்ந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடி சிறப்பித்தார்கள். நிகழ்ச்சியின் முடிவில் மாணவர்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துச் சொல்லி பரிசுகளும், இனிப்புகளும் வழங்கினார்கள்.




2025 HAPPY NEW YEAR

அனைவருக்கும்
கிறிஸ்துமஸ் மற்றும்
இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துகள் !



# பெத்சான் சிறப்பு பள்ளி

( அறிவுசார் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )
தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது
எண் : 828, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.
Contact No : 98944 76662
E-mail : bethshanspecialschool@gmail.com | Web : www.bethshanschool.com